# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.136/2025

**Deposition of Witness for Prosecution PW 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ்குமார் | Father's Name | : | வரதராஜன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 33 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 17th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிவிரல் ரேகை பதிவு கூடத்தில் ஆய்வாளராக (விரல் ரேகை) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் பணியிலிருந்தபோது திருவாரூர் தாலுகா காவல் ஆய்வாளர் திருவாரூர் தாலுகா காவல் நிலைய கு.எண் 14/2025 வழக்கு தொடர்பாக திருவாரூர் தாலுகா காவல் நிலைய சரக

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.17 15:50:47 +0530

எல்லைக்குட்பட்ட தியானபுரம் காளியம்மன் கோவில் தெருவில் உள்ள ஒரு வீட்டில் அடையாளம் தெரிந்த ஆண் நபர் இறந்து கிடப்பதாகவும் சம்பவ இடத்தை பார்வையிட்டு வெளி நபர் விரல் ரேகை பதிவு ஏதேனும் உள்ளதா என்று என்னுடைய காவல் துணை கண்காணிப்பாளர் (விரல்ரேகை) அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் என்னுடைய காவல் துணை கண்காணிப்பாளர் (விரல்ரேகை) என்னை இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வு மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்ய அறிவுறுத்தியதன் பேரில் நானும் என்னுடைய துணை காவல் கண்காணிப்பாளர் (விரல் ரேகை) அவர்களும் 12.01.2025 அன்று காலை 10.50 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு வெளிநபர் விரல் ரேகை பதிவு ஏதேனும் உள்ளதா என கண்டறிய சம்பவ இடத்தில் உள்ள பொருள்களின் மீது இரசாயண பவுடர் தூவி ஆய்வு செய்ததில் சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற Liquor பாட்டிலில் (1 Express Special Brandy 180 ml) ஒரு விரல் ரேகை பதிவு தெளிவு செய்யப்பட்டு அதற்கு S1 என்று குறிக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர் உள்ளிருப்போர் (Inmates) மற்றும் இறந்த நபர் விரல் ரேகை பதிவு சேகரிக்கப்பட்டு ஒப்பீடு செய்ததில் அவை யாருடனும் ஒத்துக் போகவில்லை. விரல் ரேகை பதிவு தெரிவு செய்யப்பட்ட Liquor பாட்டிலை (1 Express Special Brandy 180 ml)

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:50:54 +0530

நீதிமன்ற நடவடிக்கைக்காக புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலகம் வந்து இந்த வழக்கு தொடர்பான S1 என்ற விரல் ரேகை பதிவு அலுவலகத்தில் உள்ள பழைய குற்றவாளிகளின் விரல் ரேகை பதிவுடன் ஆய்வு செய்ததில் அவை யாருடனும் ஒத்துப் போகவில்லை. பின்னர் 13.01.2025 அன்று இந்த வழக்கு தொடர்பாக திருவாரூர் தாலுகா காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட 25 வயதுடைய ஜெயராஜ், த/பெ. ஜெயபால், காளியம்மன் கோவில் தெரு, தியானபுரம், திருவாரூர் என்பவருடைய தினக் கைது விரல் ரேகை பதிவு தாளை ஆய்வு செய்தபோது அவருடைய வலது கை ஆட்காட்டி விரல் ரேகை பதிவானது. சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற S1 என்ற விரல் ரேகை பதிவுடன் ஒத்துப்போனது என்ற விபரத்தினை C.No.3/SOC/SDFPB/TVR/2025, Dated 13.01.2025 என்ற அறிக்கையை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி அறிக்கை **அ.சா.ஆ.7**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியின் அம்மா, தங்கை, மனைவி மற்றும் இவ்வழக்கில் இறந்தவர் ஆகியோர் ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரி. Liquor பாட்டிலில் ஆஜர் எதிரியின் விரல் ரேகை இருந்ததாக போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:51:01 +0530

ஆய்வாளருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. உண்மையில் இறந்த ஜெயராமனின் விரல் ரேகைதான் Liquor பாட்டிலில் பதிவாகியிருந்தது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:51:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.136/2025**

**Deposition of Witness for Prosecution PW 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. ஹரிபிரசாத் | Father's Name | : | அறிவழகன் |
| Village | : | திருவாரூர் | Taluk | | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 36 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 17th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025 அன்று பணியிலிருந்தபோது திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய கு.எண்.14/2025 வழக்கில் சம்மந்தப்பட்ட ஜெயராமன், வயது 22 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய திருவாரூர் தாலுகா காவல் ஆய்வாளர் அவர்கள் முதல் நிலை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:51:19 +0530

காவலர் 220 திரு வீரமணி என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக கொடுத்த வேண்டுகோள் கடித்தை பெற்று அன்று பிற்பகல் 3.45 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன். நல்ல உடல் வாகு கொண்ட ஆணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு: 1) சாய்ந்த வாட்டில் தசை அளவு ஆழம் உள்ள வெட்டு காயம் 3x0.5 cm அளவில் தாடை எலும்பிற்கு கீழ் இடதுபக்கம் காணப்பட்டது. 2) குறுக்கு வாட்டில் தசை அளவு ஆழம் உள்ள குத்து காயம் 2x0.5 cm அளவில் கழுத்தின் இடதுபக்கம் தாடை எலும்பிலிருந்து 8 செமீ கீழே காணப்பட்டது. 3) குறுக்கு வாட்டில் தோல் அளவு ஆழம் உள்ள வெட்டுகாயம் 7x0.3 cm அளவில் கழுத்தின் முன்பகுதியில் தாடை எலும்பிலிருந்து 8 செமீ கீழே காணப்பட்டது. 4) குறுக்கு வாட்டில் உள்ள குத்து காயம் 3x0.5 cm x அளவில் carotid ரத்த நாளம் ஆழம் கழுத்தின் வலது பக்கம் தாடை எலும்பிலிருந்து 8.5 செமீ கீழே காணப்பட்டது. அந்த காயத்தை கூராய்வு செய்து பார்த்தபோது வலது பக்க கழுத்திலிருந்த தசைகள் மற்றும் இதர ரத்த நாளங்கள் வெட்டப்பட்டு காணப்பட்டது. 5)குறுக்கு வாட்டில் உள்ள குத்து காயம் 4x0.5 cm x அளவில் கழுத்து எலும்பு ஆழம் கழுத்தின் முன்பகுதியில் தாடை எலும்பிலிருந்து 9 செமீ கீழே காணப்பட்டது. அந்த காயத்தை கூராய்வு செய்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:51:25 +0530

பார்த்தபோது தசைகள், மூச்சு குழாய், உணவு குழாய் சேதமடைந்து காணப்பட்டது. அந்த கழுத்து எலும்பில் குத்து காயத்தினால் ஏற்பட்ட எலும்பு முறிவு காணப்பட்டது. 6) குறுக்கு வாட்டில் தோல் அளவு ஆழம் உள்ள வெட்டுகாயம் 5x0.3 cm அளவில் கழுத்தின் முன்பகுதியில் 5 வது காயத்திலிருந்து 0.5 செமீ கீழே காணப்பட்டது. 7) குறுக்கு வாட்டில் தோல் அளவு ஆழம் உள்ள வெட்டுகாயம் 12x0.3 cm அளவில் கழுத்தின் முன்பகுதியில் 5 வது காயத்திலிருந்து 2 செ.மீ. கீழே காணப்பட்டது. 8) சாய்ந்த வாட்டில் உள்ள குத்து காயம் 2x1 செ.மீ. x நெஞ்சு எலும்பு ஆழம், நெஞ்சின் மையப்பகுதியில் நெஞ்சு குழியிலிருந்து 3 செமீ கீழே காணப்பட்டது. 9) குறுக்கு வாட்டில் தோல் அளவு ஆழம் உள்ள வெட்டுகாயம் 6x1 cm அளவில் இடது தோள்பட்டையின் முன்பகுதியில் காணப்பட்டது. 10) சிராய்ப்பு காயங்கள் 3x2 செ.மீ. இடது கால் முட்டியிலும், 1x1 செ.மீ. இடது கால் சுண்டுவிரலிலும், 1.5x1 செ.மீ. இடது பாதத்தின் வெளிபுறத்திலும் காணப்பட்டது. தலைப்குதியை கூராய்வு செய்து பார்த்ததில் மண்டையோடு, மூளைத்திரை சீராக காணப்பட்டது. மூளை வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. நெஞ்சு பகுதியை கூராய்வு செய்ததில் இரு நுரையீரல் வெளிறி காணப்பட்டது. இதயத்தை கூராய்வு செய்து பார்த்தபோது சீராக காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், கணையம், இரு புற சிறுநீரகம்,

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:51:31 +0530

இடுப்பு எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 75 கிராம் அளவிலான பழுப்பு நிற பாதி செரித்த உணவு பழவாடை கலந்த வாசனையுடன் காணப்பட்டது. பெருங்குடல் காற்று அடைத்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. உள்ளுறுப்புகள் அனைத்தும் வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் அவர் மது அருந்திருந்தார் என்று அறிக்கையில் கண்டறியப்பட்டது. அந்த Toxicology அறிக்கை **அ.சா.ஆ.8**. மேற்கூரிய நபர் கழுத்தில் ஏற்பட்டு குத்து காயங்களினால் ஏற்பட்ட அதிக ரத்தபோக்கினால் இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழங்கியுள்ளார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9**. நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.10**. நான் பிரேத பரிசோதனை செய்த நபரை அருவாளால் வெட்டினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

பொதுவாக அருவாளால் ஒரு நபரை வெட்டும்போது Cut Injury என்ற வெட்டுக் காயம்தான் ஏற்படும் என்றால் சரி. கூர்மையான கத்தி, ஈட்டி போன்ற

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.17 15:51:37 +0530

ஆயுதங்களால் தாக்கும்போது குத்து காயம் ஏற்படும் என்றால் வாய்ப்புண்டு. ஒரு நபர் மது அருந்திவிட்டு வாகனத்தில் வேகமாக செல்லும்போது தடுமாறி கீழே விழும்போது கம்பி போன்ற ஆயுதங்கள் குத்தினால் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சூழ்நிலையை பொறுத்து வாய்ப்புண்டு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.17 15:51:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.